Tuesday, August 4, 2026

Start time 11:50 AM

III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.

**CRLA.No.16/2023**
**TNTR09-000036-2023**

Deposition of witness for the DW1
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 04-08-2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Sigamani | Village | : | |
| Father's / Husband's Name | : | Arumugam | Calling | : | |
| Age | : | | Taluk | : | |

**முதல் விசாரணை**

நான் தற்போது திருநின்றவூரில் குடியிருந்து வருகிறேன். நான் அட்வகேட்டாக தொழில் செய்து வந்தேன். நான் தற்பொழுது ஆகிசிடென்டால் எனது கையை உபயோகபடுத்த முடியாத சூழ்நிலையில் இருந்து வருகின்றேன். எனது தரப்பில் மனுவோடு இணைக்கப்பட்ட 4 ஆவணங்களை குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1. 26.03.2018 தேதியிட்ட ஆய்வாளர் முன்பாக எழுதி கொடுக்கப்பட்ட undertaking கடிதத்தின் உண்மை நகல் Ex.D1
2. 16.03.2018 தேதியிட்ட ஆய்வாளர் முன்பாக எழுதி கொடுக்கப்பட்ட undertaking கடிதத்தின் உண்மை நகல் Ex.D2
3. 22.05.2018 தேதியிட்ட ஆய்வாளர் முன்பாக எழுதி கொடுக்கப்பட்ட undertaking கடிதத்தின் உண்மை நகல் Ex.D3
4. Ex.D3 ஆவணத்தின் பின்புறமாக செய்யப்பட்டிருக்கின்ற மேற்குறிப்பு Ex.D4.

நான் மூன்று முறை புகார்தாரருக்கு தலா ரூ.5 ஆயிரம் கொடுத்திருக்கின்றேன். இரண்டு முறை 10 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கின்றேன்.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்டிருக்கின்ற 4 ஆவணங்களும் காவல்

நிலையத்தில் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் அது காவல் நிலையத்தில் தயார் செய்யப்படவில்லை, நான் எழுதி கொடுத்தது. இந்த ஆவணங்களை காவல் நிலையத்தில் தான் எழுதிகொடுத்தேன். இந்த ஆவணங்களின் Author of the document T6-ஆவடி காவல் நிலைய ஆய்வாளர் என்றால் சரியல்ல, அதனை நான் தான் எழுதினேன். 26.03.2018 தேதியிட்ட Ex.D1 ஆவணத்தின் படிதான் நான் புகார்தாரருக்கு ரூ.3,90,000/-க்கு காசோலை கொடுத்தேன் என்றால் சரிதான். சாட்சி தற்பொழுது அதனை எழுதியது என்னுடைய கவுன்சில் பிரேம்குமார் என்று கூறுகின்றார். Ex.D2 ஆவணம் 16.03.2018 தேதியிட்டது என்றால் சரிதான். இந்த ஆவணம் Ex.D1 தேதிக்கு முன்னிட்ட ஆவணம் என்றால் சரிதான். Ex.D2, Ex.D3 and Ex.D4 ஆவணங்களில் புகார்தாரர் பணத்தை பெற்றுக்கொண்டதாக அவருடைய கையெழுத்து இல்லை என்றால் சரிதான். நான் இந்த பணத்தை writer மூலமாக புகார்தாருக்கு கொடுத்தேன். நான் புகார்தாரருக்கு காசோலை படி கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்க கூடாது என்பதற்காக இந்த ஆவணங்களை தாக்கல் செய்திருக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரருக்கு காசோலை தொகையை கொடுக்க கடப்பாடுடையவர் என்றால் சரியல்ல. நான் several times பணம் கொடுத்திருக்கின்றேன்.

**மறுவிசாரணை இல்லை.**

**சாட்சியின் நடத்தை பற்றிய குறிப்பு.** சாட்சியானவர் சக்கர நாற்காலியில் அமர்ந்து கொண்டு பதில் அளிக்கும் நிலையிலும், கழுத்துப்பட்டை அணிந்துகொண்டும், திக்கி, திக்கி பதில் அளித்தார்.

**End Time 12:15 PM**